(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW9 |
| Name | : | **திரு.பெர்னார்டு சகாயராஜ்** |
| Father's Name | : | திரு.சந்தாணம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07th May 2026.**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம், இளையாங்குடி வட்டம் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். 10.08.2020 முதல் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் தனித்துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். 16.12.2019 முதல்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:41:58 +0530

24.07.2020 வரை சாக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியராக முழு கூடுதல் பொறுப்பு வகித்தேன்.

2. மண்டல துணை வட்டாட்சியரின் பணியானது கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் பணியை ஆய்வு செய்வது மற்றும் பட்டா மாறுதல் சம்பந்தமாக ஆணை வழங்குதல் மற்றும் கணினி மூலம் Online–ல் வருமான சான்று, சாதி சான்று, இருப்பிட சான்று, வாரிசு சான்றுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு பணிகள், தேர்தல் பணிகள் ஆகியவை ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் வருமான சான்றிதழை நான் தான் வழங்கினேன். அந்த வருமான சான்றிற்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் பரிந்துரையின்பேரில்தான் Online மூலமாக சான்று வழங்கினேன். அந்த வருமானவரிச்சான்றானது முருகன் மகன் சுப்பு என்பவருக்காக 2019–2020–ம் ஆண்டில் அவரது வருமான ரூ.96000/– என சான்றிதழ் வழங்கினேன். அந்த **வருமான சான்றிதழின் அசல் அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:42:04 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:42:10 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.